# மேட்டுப்பாளையம் நகராட்சி

30.06.2021ம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டப் பொருள்</u>

<table>
<tr><td>1</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள பகுதிகளில் Covid–19 தொற்று நோய் பரவி வருவதை அடுத்து தொற்று நோய் உறுதி செய்யப்பட்ட நபர்கள் வசிக்கும் பகுதிகளை மாநில அரசு மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படி அப்பகுதிகளை தடை செய்து, அப்பகுதிகளில் உள்ள வீடுகளை தனிமைப்படுத்தி மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு தடுப்புகளை அமைக்கும் பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணியின் அவசிய அவசரம் கருதி நகராட்சி சட்டம் 1920 விதி 15ன்கீழ் மேற்கொண்டு அதற்குண்டான செலவினம் ரூ. 1,99,913/–ஐ மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1480/2020/இ1</td></tr>
<tr><td>2</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள பகுதிகளில் Covid – 19 தொற்று பரவி வருவதை அடுத்து தொற்று நோய் உறுதி செய்யப்பட்ட நபர்கள் வசிக்கும் பகுதிகளை மாநில அரசு மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படி அப்பகுதிகளை தடை செய்து அப்பகுதிகளில் உள்ள வீடுகளை தனிமைப்படுத்தி மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு தடுப்புகளை அமைக்கும் பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணியின் அவசிய அவசரம் கருதி நகராட்சி சட்டம் 1920 விதி 15ன் கீழ் மேற்கொண்டு அதற்குண்டான செலவினம் ரூ.1,99,265/–ஐ மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1480/2020/இ1</td></tr>
<tr><td>3</td><td>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN40B 1483க்கு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த 17.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br><table><tr><td>வ.எண்.</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்தத் தொகை ரூ.</td></tr><tr><td>1</td><td>திருவாளர் .ஸ்ரீ.பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ்.ஈரோடு</td><td>ரூ.2,49,200/–</td></tr><tr><td>2</td><td>திருவாளர். முருகன் ஆட்டோஸ், ஈரோடு</td><td>ரூ.2,64,000/–</td></tr></table>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.862/2021/எச்1</td></tr>
<tr><td>4</td><td>இந்நகராட்சிக்கு எதிராக திருமதி.சாய்வசந்தி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P No.13752/2018ல் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராகி எதிர்வாதுரை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் வழக்கு சம்பந்தமாக வழக்கு கட்டணம் ரூ.15000/–ஐ வழங்கும்படி சென்னை உயர்நீதிமன்ற மூத்த சிறப்பு அரசு வழக்கறிஞர் தொலைபேசி மூலம் கோரியுள்ளார். எனவே, மேற்படி வழக்கு கட்டணம் ரூ. 15,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3657/2016/எப்1</td></tr>
</table>

5 2019 –2020ஆம் ஆண்டில் இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி பணிகளின் விபரத்தினை தி இண்டியன் இண்டஸ்ட்ரியல் நியூஸ் மாத இதழில் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பரக் கட்டணமாக ரூ. 16275/–ஐ வழங்க கோரி Bill No 111, நாள் 05.01.2021 னை தி இண்டியன் இண்டஸ்ட்ரியல் நியூஸ் மாத இதழ் நிறுவனம் அளித்துள்ளது. எனவே, மேற்காண் தொகையினை மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2072/2021/இ1

6 இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN40S 4582க்கு தகுதிச் சான்று பெறும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1195/2021/எச்1

7 இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN40S 4549க்கு தகுதிச் சான்று பெறும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.465/2021/எச்1

8 இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் சேமநலநிதி தொகைக்கு 1989 –1990 முதல் 2019–2020 வட்டி கணக்கிடும் பணிக்கு தனியார் நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு.கே.பிரபாகரன்<br>Sanjey Solution<br>குமராபாளையம் | ரூ.3,48,000 |
| 2 | திரு.வி.சதீஸ் குமார்,<br>Ram Solution,<br>திருவான்மியூர் , சென்னை | ரூ.3,66,000 |
| 3 | Ozone Technalogies<br>லேக்வியூ ரோடு, சென்னை | ரூ.3,55,000 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.பிரபாகரன் Sanjey Solution குமராபாளையம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2355/2016/பி2

9 இந்நகராட்சியில் 2021–22ஆம் ஆண்டு நகராட்சி பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி தொகையை E-Filing செய்ய கடந்த ஆண்டு பணி மேற்கொண்ட NPRV Associates என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 50,000/– மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2051/2020/பி1

10 இந்நகராட்சியில் 2020– 21ஆம் ஆண்டு கணக்குகள் (வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதி) தணிக்கைக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. எனவே, 2020 – 21ஆம் ஆண்டு கணக்குகளை தனியார் மூலம் தயார் செய்யவும் – அதற்கான உத்தேச செலவினம் ரூ. 60,000/–க்கும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.854/2018/பி1

| | |
|---|---|
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 காட்டூர் பகுதியில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்திற்கு சில அபிவிருத்தி பணிகள் மேற்கொண்டு முழுமையான பணிகள் முடிக்க கூடுதல் செலவினமாக ரூ.5.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பணியினை நகராட்சியின் கல்விநிதியின் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1745/2021/இ1 |
| 12 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32, மணி நகர் துவக்கப்பள்ளியில் புதியதாக வைப்பறை (Store Room) , பழைய வகுப்பறைகள் பழுதுபார்க்கும் பணி மற்றும் சுற்றுச்சுவர் பழுதுபார்த்து வர்ணம் பூசுதல் பணிக்கு ஆகும் செலவினம் ரூ.6.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1743/2021/இ1 |
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 மணிநகர் பகுதியில் உள்ள நகரவைத் துவக்கப்பள்ளியில் சுமார் 230 மாணவர்கள் பயின்று வருகின்றனர். எனவே மாணவர்களுக்கு வகுப்பறைகள் போதுமானதாக இல்லை மேலும் ஒரு வகுப்பறை கட்டி தருமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க பழைய வகுப்பறையின் மேல் முதல் தளத்தில் புதியதாக வகுப்பறை அமைக்க ஆகும் தோராய மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1742/2021/இ1 |
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 சங்கர் நகர் பகுதியில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்திற்கு சில அபிவிருத்தி பணிகள் மேற்கொண்டு முழுமையாக பணிகள் முடிக்க கூடுதல் செலவினம் ரூ.5.00/– இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பணியினை நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1744/2021/இ1 |
| 15 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண். 2ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பொது கழிப்பிடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. இதனால் இந்த பொது கழிப்பிடத்தினை மராமத்து பணிகள் மேற்கொண்டு பொதுமக்கள் பயன்படுத்த ரூ.2.75 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1739/2021/இ1 |
| 16 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பெண்கள் மேல்நிலை பள்ளியில் சுமார் 1000 மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள் இப்பள்ளியில் அதிக எண்ணிக்கையில் மாணவிகள் பயின்று வருவதால் கூடுதலாக கழிப்பிடம் மற்றும் மேற்கூரை அமைக்க பள்ளியில் தலைமை ஆசிரியர் கோரியுள்ளதன் அடிப்படையில் இப்பள்ளிக்கு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ரூ.9.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1747/2021/இ1 |

17 இந்நகராட்சியில் 2020 – 21 ஆம் ஆண்டு கணக்குகள் தயார் செய்யும் பணிக்கு கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | விவரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | ச.பிரகாசம்,<br>சூர்யா அசோசியேட் | ரூ.85000/– |
| 2 | சி.தாமரைச்செல்வி<br>சன் டேட்டாகாம் | ரூ.60,000/– |
| 3 | கே.கதீர் மேனன்<br>க்ளோபல் டேட்டா | ரூ.75,000/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள சி.தாமரைச்செல்வி, சன்டேட்டாகாம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி ஆண்டுக்கணக்குகள் முடிக்க வேண்டியுள்ளதால் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நபருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.854/2018/பி1

18 இந்நகராட்சி அலுவலகத்தில் இயங்கி வரும் இரண்டு நகல் இயந்திரங்கள் (Sharp AR) இயந்திரத்தில் Toner Cartridge மற்றும் Drum kit பழுதாகி உள்ளதால் அதனை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,000/–க்கு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. அலுவலக அவசர அவசிய பணி என்பதால் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரவும் பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்

ந.க.எண்.4730/2015/அ2

19 இந்நகராட்சியில் இயங்கி வரும் இரண்டு நகல் இயந்திரங்களுக்கு பழுது பார்க்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | Print Tec<br>வித்யாலட்சுமி காம்ப்ளக்ஸ்,<br>காந்திபுரம், கோவை. | 14,500/– |
| 2 | g Ad Technologies காந்திபுரம் | 14868/– |
| 3 | SK Communications காந்திபுரம் | 14750/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள Print Tec நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.4730/2015/அ2

20 மேட்டுப்பாளையம் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்கள் வாங்கப்பட்டது.

இவ்வாகனங்கள் அனைத்தும் பேட்டரி மூலம் இயக்கப்படுவதால் அவற்றை பழுது ஏற்படாமல் தொடர்ந்து இயக்க வேண்டியுள்ளது இவ்வாகனங்கள் ஒரு ஆண்டிற்கு பராமரிக்க ரூ. 7.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1823/2021/இ1

| | |
|---|---|
| 21 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து உரம் தயாரிக்க பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனங்களில் செய்யப்படுகிறது. இவ்வாகனங்கள் தினமும் உபயோகிக்கப்படுவதால் உதிரி பாகங்கள் மிகவும் சேதம் அடைகின்றன இதனை உடனடியாக பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. மேலும் மழைகாலங்களில் இவ்வாகனங்களை பயன்டுத்துவதால் Battery, Controller மற்றும் electronic உதிரி பாகங்களை உடனடியாக பழுது நீக்க வேண்டியுள்ளது. இப்பணிகளை ரூ.9.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1829/2021/இ1 |